# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

(தேசிய மதிப்பீட்டுத் தரநிர்ணயக் குழுவின் "A+" தரச்சான்றிதழ் மூன்றாம் சுற்றில் பெற்றது)
பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி – 620 024.


முனைவர் க. துரையரசன், எம்.ஏ.,எம்.எட்., எம்.ஃபில்.,பிஎச்.டி.
தேர்வு நெறியாளர்

அலுவலகம் : 0431-2407016, 2407060
தொலைப்படி : 0431-2407444
மின் அஞ்சல் : coe@bdu.ac.in
வலைத்தளம் : www.bdu.ac.in


ந.க.எண். 001/தே.நெ.அ/ம.பி-2/ஏப்ரல் 2020 நாள்: 25.01.2020

பெறுநர்

கல்லூரி முதல்வர் அவர்கள்
பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்ற
அனைத்துக் கல்லூரிகள்

அன்புடையீர்,

பொருள்: ஏப்ரல் 2020 – சிறப்புப் பாடங்கள் - தேர்வு விடைத்தாள் திருத்தும் பணி – ஆசிரியர்கள் பெயர் பட்டியல் கோருதல் - சார்பு

------

பாரதிதாசன் பல்கலைக்கழக இணையதளத்தில் **http://www.bdu.ac.in/examinations/ugved.php** என்கிற இணைப்பில் காணப்பெறும் படிவத்தை பதிவிறக்கம் செய்து, அதில் ஏப்ரல் 2020 பருவத்திற்கு தங்கள் கல்லூரியில் கீழே குறிப்பிட்டுள்ள சிறப்புப் பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களின் பெயர்களைப் பூர்த்தி செய்து 10.02.2020–க்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**Details of Special Papers**

| Subject code | Subject |
|---|---|
| 1. 16UGCES | ENVIRONMENTAL STUDIES |
| 2. UGGS | GENDER STUDIES |

படிவங்களைப் பூர்த்தி செய்யும் முன் கீழ்க்காணும் விவரங்களின் மீது தனிக் கவனம் செலுத்தும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது:

1. சிறப்புப் பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களின் பெயர்களை மட்டும் அவர்களின் பணிமூப்பு (Seniority) அடிப்படையில் பட்டியலிடவும். பல்கலைக்கழகத் தேர்வாளர் பட்டியலில் இல்லாத ஆசிரியர்களின் பெயர்களைக் கண்டிப்பாகப் பரிந்துரைக்க வேண்டாம்.

2. மாற்றுப் படிவங்களை உபயோகிக்க வேண்டாம்.

3. ஆசிரியர்களின் எண்ணிக்கை (அனைத்துத் துறைகளையும் சேர்த்து துறைக்கு இருவர் வீதம்) இருபதுக்கு (20) மிகாமல் இருக்க வேண்டும். 20-க்கு மேல் இடம் பெற்றுள்ள பெயர்கள் கருத்தில் கொள்ள இயலாது

4. பல்கலைக்கழக இணையதளத்திலிருந்து **http://www.bdu.ac.in/examinations/ugved.php** பதிவிறக்கம் செய்யப்பட்ட **MS Excel format**-ல் பூர்த்தி செய்து **confidential2@bdu.ac.in** என்கின்ற மின் அஞ்சல் முகவரிக்கு 10.02.2020–க்குள் அனுப்பி வைக்கவும். பதிவிறக்கம் செய்யப்படாத **MS Excel format**-ல் பெறப்படும் மென் நகலினை (**Soft Copy**) ஏற்றுக்கொள்ள இயலாது. மேலும் மின்னஞ்சலுக்கு அனுப்பும் படிவத்தின் நகல் ஒன்றினைக் கல்லூரி முதல்வரின் கையொப்பம் இட்டு, அஞ்சல் வழியாகத் தேர்வு நெறியாளர் அலுவலகத்திற்கு 10.02.2020-க்குள் அனுப்பி வைக்கவும். மேற்குறிப்பிட்டவாறு அனுப்பி வைக்கப்படாத பட்டியல்கள்/காலந்தாழ்ந்து கிடைக்கப்பெறும் பட்டியல்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஏப்ரல் 2020 தேர்வு முடிவுகளை விரைவாக அறிவிக்க ஏதுவாகத் தங்களது ஒத்துழைப்பினை நல்கி இக்கடிதத்தின் மீது தனிக்கவனம் செலுத்தி விரைந்து செயல்படுமாறு அனைத்துக் கல்லூரி முதல்வர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

25.1.2020

தேர்வு நெறியாளர்